# அரசு செய்தி குறிப்பு – 9.3.2009

எண் – 167

## உச்ச நீதி மன்ற ஆணைப்படி அதிகாரி விசாரணை

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு.

19.2.2009 அன்று சென்னை உயர் நீதி மன்ற வளாகத்தில் நடந்த அசம்பாவிதச் சம்பவங்கள் தொடர்பாக உச்ச நீதி மன்றம், 6–3–2009 அன்று அளித்த இடைக்கால உத்தரவு இன்று (9.3.2009) தமிழக அரசுக்குக் கிடைக்கப் பெற்றது. அந்த உத்தரவில் உச்ச நீதி மன்றம் அமைத்த ஒரு நபர் விசாரணை அறிக்கையினை அனுப்பி வைத்து – அதன் மீது தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உச்ச நீதி மன்ற உத்தரவின்படி – உயர் நீதி மன்ற வளாகத்தில் நடைபெற்ற அசம்பாவிதங்களின் போது – காவல் துறையினர் நடந்த கொண்ட விதம் பற்றியும், அதற்குப் பொறுப் பானவர்களை கண்டறியும்பொருட்டும், தமிழக அரசின் ஒரு உயர் நிலை அதிகாரியைக் கொண்டு விசாரிப்பது என்றும், இதற்கான அறிக்கையினை அவர் விரைவில் அளிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9